மானாமதுரை நகராட்சி

மானாமதுரை நகராட்சியில் சாதாரணக்கூட்டம் 24.03.2023ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்றத்தலைவர் மானாமதுரை நகராட்சி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

| | | |
|---|---|---|
| பொருள்-1 | ஆணையாளரின் ஜனவரி, பிப்ரவரி மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு. | தீர்மான எண் 134<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள்-2 | மானாமதுரை நகராட்சி தேர்வுநிலை பேரூராட்சியாக இருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் சாலைகள் பற்றிய விபரங்கள் ஏதும் இல்லை. தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் அனைத்து நகராட்சிகளிலும் சாலைகள் பற்றிய விவரங்களை கணினியில் பதிவேற்றம் செய்யக் கோரியுள்ளார். மேலும் இந்நகராட்சியில் கழிவு கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் திட்ட மதிப்பீடுகள் தயாரித்து அனுப்ப கோரியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி சாலைப்பணி தயாரிக்கவும் மற்றும் கழிவு கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்க இந்நகராட்சியில் போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாததாலும் தனியார் ஆலோசனை நிறுவனம் மூலம் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண் 135<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள்-3 | மானாமதுரை நகராட்சி தேர்வுநிலை பேரூராட்சியாக இருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் மேற்படி பணிகளை கண்காணிக்க தற்போதைய நிலையில் தொழில்நுட்பபணியாளர்கள் யாரும் இல்லாததால் திட்டப்பணிகளை கண்காணிக்க ஒப்பந்த | தீர்மான எண் 136<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அடிப்படையில் தினக்கூலி பணியாளர்கள் இரண்டு நபர்களை 1 வருட காலத்திற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் விலை விகிதத்தின்படி, அமர்த்திக்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.8.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலககுறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள்-4 | மானாமதுரை நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் கணிணி இயக்குபவர்களுக்கு ஊதியம் முறையே தலா ரூ.15,000/–வீதமும் 2 நபர்களுக்கு மற்றும் ஒரு நபருக்கு ரூ.9,300/–வீதம், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.H2/8198/2019 நாள்.25.07.2019ன்படியும், இந்நகர்மன்ற தீர்மான எண்.120 நாள்.04.01.2023இல் குறிப்பிட்டுள்ள நபர்களுக்கு ஆகஸ்ட் 2022 முதல் ஜனவரி 2023 வரை 6 மாதங்களுக்கு தீர்மானம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் பிப்ரவரி 2023 முதல் ஜீலை 2023 வரை ஆறு மாதங்களுக்கு மட்டும் மேற்படி விகிதப்படி ஊதியம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.25/2022/அ1) | தீர்மான எண் 137<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள்-5 | மானாமதுரை நகராட்சியில் சிவகங்கை சாலையில் அண்ணாசிலை அருகில் மேல்நிலை நீர்த்தொட்டியுடன் கூடிய வணிக வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி மேல்நிலை நீர்த்தொட்டியுடன் கூடிய வணிக வளாகம் அமைக்கப்பட்டு நீண்ட காலமாகிவிட்டதால் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்படி கட்டிடம் பழுதாகி இடிந்துவிடும் நிலையில் உள்ளதாக தினசரி | தீர்மான எண் 138<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | நாளிதழில் செய்தி வெளியானதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் சிவகங்கை அவர்கள் பார்வையிட்டு மேற்படி கட்டிடத்தை உடனடியாக தர ஆய்வு செய்து இடிக்க அறிவுரை வழங்கியதன் பேரிலும் இக்கட்டிடத்தின் உறுதி தன்மையை பரிசோதனை செய்து அறிக்கை அளிக்கவும், மேலும் கழிவுக்கசடு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க மண்பரிசோதனை செய்யவும், அலுவலக வளாகத்தில் புதிய கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு மூன்றாம் தரப்பு பரிசோதனை செய்து அறிக்கை வழங்கவும், இயக்குநர், அண்ணாபல்கலைக்கழகம் புதுக்கோட்டை கல்லூரிக்கு உத்தரவு வழங்கவும் அதற்குண்டான செலவுத் தொகையினை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**அலுவலககுறிப்பு—**<br><br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள்-6 | மானாமதுரை நகராட்சி தேர்வுநிலை பேரூராட்சியாக இருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்க பேரூராட்சியாக செயல்பட்டு வந்த காலத்தில் உள்ள மதிப்பீட்டு வந்த தொகைகளை வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு விட்டதால், குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க இந்நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான மதிப்பீட்டு கட்டணம் கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு. | தீர்மான எண் 139<br>அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண் | பணியின் விபரம் | கருங்கல் ஜல்லி சாலை மற்றும் மண் சாலை | தார் சாலை | சிமிண்ட் சாலை |
|---|---|---|---|---|

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>0 முதல் 30 மீட்டர் வரை</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>1.</td><td>அ.சாலை மறுசீரமைப்பு கட்டணம்</td><td>0</td><td>ரூ.4912</td><td>ரூ.5404</td></tr>
<tr><td>2.</td><td>ஆ.குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான மதிப்பீட்டு கட்டணம்</td><td>0</td><td>ரூ.1070</td><td>ரூ.1091</td></tr>
<tr><td>3.</td><td>மொத்தம் /அடிப்படை விலை விகிதம்</td><td>0</td><td>ரூ.5982</td><td>ரூ.6495</td></tr>
<tr><td></td><td>30 மீட்டர் முதல் 90 மீட்டர் வரை</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>4.</td><td>அ. சாலை மறுசீரமைப்பு கட்டணம்</td><td>0</td><td>ரூ.5512</td><td>ரூ.6004</td></tr>
<tr><td></td><td>ஆ. குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான மதிப்பீட்டு கட்டணம்</td><td>0</td><td>ரூ.1798</td><td>ரூ.1831</td></tr>
<tr><td></td><td>மொத்தம் /அடிப்படை விலை விகிதம்</td><td>0</td><td>ரூ. 7310</td><td>ரூ.7835</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு—</u>
மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள்-7</td>
<td>
பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணிக்கு குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்பட்டு வாகனங்களுக்கு 2023—2024 ஆண்டிற்கு சாலைவரி காப்பீடு புதுப்பிக்க ஏற்படும் உத்தேச செலவினத் தொகையாக ரூ.2,00,000/—க்கு (ரூபாய் இரண்டு இலட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு.
<u>அலுவலககுறிப்பு—</u>
மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண் 140<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள்-8</td>
<td>இந்நகராட்சி பகுதிகளில் தொடக்கப்பள்ளி நடுநிலைப்பள்ளி, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி என மொத்தம் 16 பள்ளிகள் இயங்கி வருகின்றன இவற்றில் மொத்தம் 3500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். டெங்கு தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக மாணவ</td>
<td>தீர்மான எண் 141<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மாணவியர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தொடர்ந்து ஐந்து மாதங்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக 2023–2024ம் ஆண்டிற்கு தேவைப்படும் நிலவேம்பு பவுடர் 50கி.கி வாங்கி வழங்க ஏற்படும் உத்தேச செலவினத் தொகையாக ரூ.1,00,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள்-9 | இந்நகராட்சியில் 30 துாய்மைப்பணியாளர்கள் துாய்மைப்பணி மேற்கொண்டு வருகின்றனர். தெருக்கள் சுத்தம் செய்தல், கழிவுநீர்க்கால்வாய் சுத்தம் செய்தல் வாரச்சந்தை பேரூந்து நிலையம் சுத்தம் செய்தல் சமுதாய கழிப்பிட வளாகம், புதர்ச்செடிகள், சாலையோர புதர்ச்செடிகள் அகற்றும் பணிக்கு தேவைப்படும் தளவாட சாமான்களான கம்புடன் கூடிய கூட்டுமாறு, கடப்பாறை, மண்வெட்டி, அரிவாள், மண் அகற்றும் பிரஷ் ஆகியவை 2023–2024ம் ஆண்டிற்கான துாய்மைப்பணிக்கு வாங்கி வழங்க ஏற்படும் உத்தேச செலவினத் தொகையாக ரூ.2,00,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் ) மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண் 142<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள்-10 | துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு குப்பையில்லா நகரம் என சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான முன்னேற்பாடு பணிகளான பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் வணிக பகுதிகள் பேரூந்துநிலையம் போன்ற பகுதிகளில் **குப்பை கொட்டுவதற்கு தடை செய்யப்பட்டபகுதி** என விழிப்புணர்வு பலகைகள் நிறுவியும் அப்பகுதிகளில் மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் தாங்கியுடன் கூடிய குப்பைத்தொட்டிகள் வாங்கி வழங்க ஏற்படும் உத்தேச செலவினத் | தீர்மான எண் 143<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | தொகையாக ரூ.4,00,000/—க்கு (ரூபாய் நான்கு இலட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு—</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள்-11 | நகர்பகுதியிலுள்ள 27 வார்டுகளிலும் தினசரி கொசுப்புழு ஒழிப்பு பணியும், முதிர்ந்த கொசு ஒழிப்புப்பணியும் நடைபெறுவதற்கு 2023—2024ம் ஆண்டிற்கு தேவைப்படும் டெமிபாஸ் 25லிட்டர் பைரித்ரம் 100லிட்டர் தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்ட்கோ சர்வ் திருச்சி நிறுவனம் மூலம் வாங்கி வழங்க ஏற்படும் உத்தேச செலவினத் தொகையாக ரூ.1,50,000/—க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ) மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு—</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண் 144<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள்-12 | இந்நகராட்சியில் 11981 குடியிருப்புகளும் 762 வணிக நிறுவனங்கள் 20க்கும் மேற்பட்ட அரசு அலுவலகங்கள் கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ளன. தூய்மை இந்திரா திட்டத்தின் படி திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் படி பொதுமக்களும் , வணிக நிறுவனங்களும் குப்பைகளை மக்கும், மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வழங்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மக்கும் குப்பை , மக்காத குப்பைகள் பற்றிய விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் 13000 எண்ணம் தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்ட்கோ சர்வ் திருச்சி நிறுவனம் மூலம் வாங்கி வழங்க ஏற்படும் உத்தேச செலவினத் தொகையாக ரூ.3,00,000/—க்கு ரூபாய் மூன்று இலட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு—</u>** | தீர்மான எண் 145<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள்-13 | இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணிக்கு குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் TN63 BD 8556 டாடா ஏசிஇ வாகனம் பழுதடைந்த நிலையில் நிறுத்தப்பட்டதால் துப்புரவு பணியில் குப்பை அகற்றும் பணியில் சுணக்கம் ஏற்பட்ட நிலையில் மேற்கண்ட டாடா ஏசிஇ வாகனத்தை கவின் ஒர்க் ஷாப் மூலம் பழுது நீக்கம் செய்யப்பட்ட தொகையை ரூ.9190/.ஐ துப்புரவு ஆய்வாளர் என்னால் செலவு செய்யப்பட்டுத எனவும் மேற்கண்ட தொகையை எனக்கு வழங்க வேண்டி கடிதம் பெறப்பட்டுள்ளது. எனவே ரூ9190/—(ரூபாய் ஒன்பதாயிரத்து நூற்றி தொண்ணுறு மட்டும் ) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலககுறிப்பு—</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண் 146<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள்-14 | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருடமும் திறந்த வெளி மலம் கழிப்பிட மற்ற நகராட்சி என சான்றிதழ் புதுப்பிக்கப்பட வேண்டும் மேலும் நடப்பு ஆண்டிற்கு திறந்த வெளி கழிப்பிட மற்ற நகராட்சி (ODF+)க்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக பொதுகழிப்பிடங்கள் 2 மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் 2 என 4 கழிப்பிடங்களில் Vending Machine 4 , Incenerator 4 புதியதாக வாங்கி வழங்க ஏற்படும் உத்தேச செலவினம் (ரூபாய் ஒரு இலட்சம்) ரூ.1,00,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு—</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது | தீர்மான எண் 147<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள்-15 | இந்நகராட்சியில் 30 நிரந்தர துாய்மைப்பணியாளர்கள் துாய்மைப்பணி மேற்கொண்டு வருகின்றனர். 2023–2024ம் ஆண்டிற்கான பாதுகாப்பு சாதனங்களான தலைக்கவசம், முகக்கவசம் , கையுறை, காலுறை, ரெப்ளச்சன் ஜாக்கெட் வாங்கி வழங்க ஏற்படும் உத்தேச செலவினத் தொகையாக ரூ.1,50,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண் 148<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள்-16 | பொதுசுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிக்கு முதிர்ந்த கொசு ஒழிக்கும் பணிக்கு பைரித்ரம் புகை மருந்து தெளிக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் இயந்திரங்கள்( Pulse Fogging ) பழுதடைந்துள்ளன. இவற்றில் பழுதுநீக்கம் மேற்கொண்டு பயன்படுத்த கூடிய நிலையில் 3 இயந்திரங்கள் உள்ளன. மேற்கண்ட 3 இயந்திரங்கள் பழுதுநீக்கம் செய்ய ஏற்படும் உத்தேச செலவினத் தொகையாக ரூ.70,000/–க்கு (ரூபாய் எழபதாயிரம்) மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலககுறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண் 149<br>அனுமதிக்கப்பட்டது. |
| பொருள்-17 | மானாமதுரை நகரில் ஒவ்வொரு ஆண்டில் ஏப்ரல் மாதத்தில் அழகர் ஆற்றில் எழுந்தருளல் நிகழ்ச்சி 15 நாட்களுக்கு தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது. அதுபோல இந்த ஆண்டிலும் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறுவதால் வைகை ஆற்றின் இருகரையோர பகுதிகளிலும் ஆற்றின் உட்பறத்திலும் | தீர்மான எண் 150<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>சீமைகருவேல மரங்கள், நாணல்புல் மற்றும் புதர்செடிகளை ஜேசிபி கொண்டு அப்புறப்படுத்தி சுத்தம் செய்ய வேண்டியுள்ளதால் அதற்கான ஏற்படும் உத்தேச செலவினத்தொகையாக ரூ.5,00,000/—க்கு (ரூபாய் ஐந்து இலட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு.<br><br><u>அலுவலககுறிப்பு—</u><br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள்-18</td>
<td>இந்நகராட்சியில் துப்புரவு பணிக்கு குப்பை வாங்க பயன்படுத்தப்பட்டு வரும் தள்ளுவண்டிகள் சுமார் 40 எண்ணம் துருப்பிடித்தும் உடைந்தும் பராமரிப்பு பணிமேற்கொண்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அவற்றை ஏலம் விட்டு அதில் கிடைக்கும் தொகையினை நகராட்சி கருவூலத்தில் சேர்க்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br><u>அலுவலக குறிப்பு—</u><br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண் 151<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள்-19</td>
<td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்ட வார்டுகளில் உள்ள நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகளின் படி கீழ்க்கண்ட பணிகளை செய்யவும் அதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 17ல் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள மாற்றுதிறனாளிகளுக்கான கழிப்பறை பழுதுபார்க்கும் பணி</td><td>2.00</td></tr>
<tr><td>2</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 23ல் பழைய பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள சமுதாயகூடத்தில் உள்ள கட்டிடத்தில் சமையல் அறை மற்றும் வாகனங்கள் நிறுத்தும் இடம் அமைக்கும் பணி</td><td>16.70</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்152<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>3</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 23ல் பழைய பேருந்து நிலைய வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் இரண்டு எண்ணிக்கையிலான கடைகளுக்கான கட்டுமான பணி மேற்கொள்ளுதல்</td><td>6.00</td></tr>
<tr><td>4</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 23ல் பழைய பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள பொதுகழிப்பறை பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி பணிகள்</td><td>5.00</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு–</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2.இப்பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள்-20</td>
<td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதாகியுள்ள குடிநீர் சின்டெக்ஸ் தொட்டி மின்மோட்டார் மற்றும் குடிநீர் குழாய் பைப் லைன் பழுது நீக்கம் செய்வதற்கும் அதற்கான ஏற்படும் உத்தேச செலவினத்தொகையாக ரூ.5,00,000/–க்கு (ரூபாய் ஐந்து இலட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>
<u>அலுவலக குறிப்பு–</u><br>
மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட பணியின் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண் 153<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள்-21</td>
<td>மானாமதுரை நகராட்சியின் 2022–2023–ம் ஆண்டிற்கான நிதிநிலை திருத்திய அறிக்கையின் மற்றும் 2023–2024 ஆண்டிற்கான நிதிநிலை உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு .<br><br>
<u>அலுவலககுறிப்பு–</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண் 154<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள்-22</td>
<td>இந்நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–2023ன் கீழ் இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பேருந்து நிலையத்தில் புதிதாக இருசக்கர வாகன நிறுத்துமிடம் ரூ.87.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்துக்கொள்ளவும், மேற்கண்ட மதிப்பீட்டு தொகையில் ரூ.61.00 இலட்சம் அரசு மான்ய</td>
<td>தீர்மான எண் 155<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | நிதியாகவும், ரூ.26.00 இலட்சம் நகராட்சி பங்குத் தொகையாக அனுமதித்து அரசாணை எண்.02 (4டி) நாள்.09.01.2023ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி பேருந்து நிலையத்தில் புதிதாக இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அமைக்க இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அமைக்க இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து ரூ.26.00 இலட்சத்தை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு–</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேலும் இப்பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியினை விரைந்து முடிக்க வேண்டியுள்ளதாலும் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள்-23 | இந்நகராட்சிக்கு 15வது நிதிக்குழு பரிந்துரைத்திட்டம் 2022–23 (Tied Grant) நிதியின் கீழ் பேட்டரியால் இயங்கும் வாகனம் 9 எண்ணமும், இலகுரக வாகனம் 8 எண்ணமும், வாங்கி கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள்அலுவலக கடிதம் எண்.18274/2022/CFC–1 நாள்.14.12.2022ன்படி, ரூ.76.14 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கி கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட ரூ.76.14 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நிதியாக ரூ.56.00 இலட்சமும் நகராட்சி பங்கு தொகை ரூ.20.14 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணிக்கு செலவாகும் ரூ.20.14 இலட்சத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.<br>**<u>அலுவலககுறிப்பு–</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேலும் இப்பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியினை விரைந்து முடிக்க வேண்டியுள்ளதாலும் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண் 156<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>பொருள்-24</td><td>இந்நகராட்சிக்கு அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள நகர்மன்ற கூடத்தில் மேஜை நாற்காலிகள் பழுது நீக்கவும், நகர்மன்ற கூடத்தை மராமத்து செய்து வர்ணம் பூசும் பணிக்கு 15.02.2023ந் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>மதிப்பீட்டுத் தொகை</td><td>ஒப்பந்தப்புள்ளி விவரம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.எஸ்.மணிகண்டன் ஒப்பந்ததாரர்</td><td rowspan="2">ரூ.1.30 இலட்சம்</td><td>மதிப்பீட்டு விலையை விட 0.01 % சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.சந்திரமோகன் ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டு விலையை விட 0.05 % சதவீதம் அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு–</u><br>1) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.மணிகண்டன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு தொகை விட குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொள்ளலாம்.<br>2) மேலும் மேற்காணும் பணி அவசரப்பணியாக இருப்பதால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கி பணி செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண் 157<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள்-25</td><td>இந்நகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டம் 2022–23ன் கீழ் ரூ.83.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.24ல் மதுரா நகர் பகுதியில் புதிதாக பூங்கா அமைக்கவும், வார்டு எண்.2ல் உள்ள சுக்கான் ஊரணியை மராமத்து செய்யவும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட பணியைச் செய்யவும் மத்திய அரசின் மான்ய நிதி ரூ.27.00 இலட்சமும் தமிழக அரசின் மான்ய நிதி ரூ.25.00 இலட்சமும் இந்நகராட்சி பங்குத் தொகையாக ரூ.36.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.83.00 இலட்சம் ஆகும். இதில் நகராட்சி பங்குத் தொகை ரூ.36.00</td><td>தீர்மான எண் 158<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>இலட்சத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலககுறிப்பு—</u><br><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேலும் இப்பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியினை விரைந்து முடிக்க வேண்டியுள்ளதாலும் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>பொருள்-26</td><td>இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.17 நியூ வசந்த் நகர் பகுதிகளில் 15வது நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ் தார்ச்சாலை அமைக்கும் நடைபெறவுள்ளதால், மேற்படி இடத்தில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ளுவதற்கு உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br><u>அலுவலககுறிப்பு—</u><br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்குரிய செலவினத்தை நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண் 159<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள்-27</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்ட வார்டுகளின் நகர்மன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின்படி சிறுமின்விசைப்பம்புடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டிகள் அமைத்துக்கொடுக்க கோரியதன்பேரில் நகர்மன்ற தலைவர் அவர்களின் பரிந்துரையின் பேரிலும், கீழ்க்கண்ட வார்டுகளின் கீழ்க்கண்ட பணிகளை செய்யவும், அதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>வார்டு. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>9</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 9ல் சங்கு பிள்ளையார் கோவில் அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி</td><td>3.30</td></tr>
</table></td><td>தீர்மான எண் 160<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>23</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 23ல் ஒவெசெ மேல்நிலைபள்ளி பின்புறம் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி</td><td>3.30</td></tr>
<tr><td>3</td><td>24</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 24ல் கன்னார் தெரு மதுரா நகரில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி</td><td>3.30</td></tr>
<tr><td>4</td><td>25</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 25ல் கன்னார் தெரு கிழக்கு 5வது சந்தில் ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி</td><td>3.30</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு—</u>
மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிகளுக்காக செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள்-28</td>
<td>
மானாமதுரை நகராட்சி வார்டு எண்.23ல் உள்ள மழைநீர் கால்வாய்கள் மழையின் காரணமாக முழுமையாக சேதமடைந்து போக்குவரத்திற்கு இடையூராகவும், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உகந்ததாகவும் இல்லாமல் உள்ளது. மழைநீர் கால்வாயினை சரிசெய்திட கோரி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினரிடமிருந்து புகார் கோரிக்கை வந்த வண்ணம் உள்ளதால் நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்டது மேலும் இப்பகுதியில் சுமார் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். எனவே பொதுமக்கள் நலன் கருதி பொதுநிதியின் கீழ் கீழ்க்கண்ட விபரப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு.
<table>
<tr><td>வ எண்</td><td>வார்டு எண்</td><td>வேலையின் விபரம்</td><td>மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்</td></tr>
<tr><td>1</td><td>23</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.23ல் மறவர் தெருவில் (கிருஷ்ணராஜபுரம்) மழைநீர் வடிகால் அமைக்கும் பணி</td><td>4.70</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண் 161<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலககுறிப்பு—</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்குரிய செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள்-29 | இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட தேவர்சிலை உள்ள உயர்கோபுர மின்விளக்குகள் பழுதாகி எரியாமல் உள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு மிகவும் சிரமமான சூழ்நிலையும், இரவு நேரங்களில் திருடர்கள் பயமும் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதால் பொதுமக்கள் நலன்கருதி உயர்கோபுர மின்விளக்குகளை பழுது நீக்க உத்தேச செலவினம் ரூ200000(இரண்டு இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு—</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்குரிய செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண் 162<br>அனுமதிக்கப்பட்டது. |

(ஒம்)சோ.மாரியப்பன் கென்னடி
நகர்மன்றத்தலைவர்
மானாமதுரை நகராட்சி